**செய்தி வெளியீடு எண்: 721** **நாள்: 29.11.12**

**<u>பத்திரிகைச் செய்தி</u>**

நில அபகரிப்பு மற்றும் போலியான ஆவணப் பதிவு ஆகியவற்றைத் தடுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகின்றது. பொது அதிகார ஆவணம், விற்பனை உடன்படிக்கை மற்றும் உரிமை ஆவண ஒப்படைப்பு உடன்படிக்கை ஆகியவை தேவையானால் பதிவு செய்து கொள்ளலாம் என்பதே நில அபகரிப்பு மற்றும் போலியான ஆவணப் பதிவிற்கு முக்கிய காரணம் என்று உணரப்பட்டது. இத்தகைய ஆவணங்களைத் தவறாகப் பயன்படுத்தி பொது மக்களை ஏமாற்றுவதைத் தடுக்கும் நோக்குடன் கடந்த 16.5.2012 அன்று சட்டமன்றப் பேரவையில் 1908ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்திற்கு சில திருத்தங்களைச் செய்து சட்ட முன் வடிவு இயற்றப்பட்டு அதன் மீது இந்திய குடியரசுத் தலைவர் தனது இசைவினை வழங்கி இந்த சட்டத் திருத்தம் தமிழ் நாடு சட்டம் 29/2012 ஆக இயற்றப்பட்டுள்ளது. இதன்படி, பொது அதிகார ஆவணம், விற்பனை உடன்படிக்கை, உரிமை ஆவண ஒப்படைப்பு உடன்படிக்கை மற்றும் 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் கூறு 5(i)ல் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டுமான உடன்படிக்கை ஆகியவை கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும். வெளிநாடுகளில் வசிப்போர் எழுதிக் கொடுக்கும் பொது அதிகார ஆவணத்திற்கு கட்டாயப் பதிவிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. விற்பனை உடன்படிக்கை மற்றும் உரிமை ஆவண ஒப்படைப்பு உடன்படிக்கை ஆகியவை தற்போதுள்ளதைப் போலவே சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற நிலை தொடரும். பொது அதிகார ஆவணங்களைப் பொறுத்தவரை அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து அமைந்துள்ள இடத்தையோ அல்லது பொது அதிகாரம் எழுதிக் கொடுப்பவர் குடியிருக்கும் இடத்தையோ ஆட்சி எல்லையாகக் கொண்டுள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் மட்டுமே பதிவு செய்யப்படும். மேலும் பொது அதிகார ஆவணத்தினைப் பதிவு செய்யும் போது பொது அதிகாரம் பெற்றவராக நியமிக்கப்படும் முகவர் மற்றும் அடையாளம் காட்டும் சாட்சிகள் ஆகியோரின் புகைப்படங்களை ஆவணத்தில் ஒட்டுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன், முகவரும் ஆவணத்தில் கையொப்பமிட வேண்டும். மேற்கண்ட ஆவணங்களின் பதிவினை கட்டாயமாக்கப்பட்டுள்ளதால், பதிவு செய்யப்படாத ஆவணத்தை விட பதிவு செய்யப்பட்ட ஆவணமே சட்டத்தின் முன் முன்னுரிமை பெறும்.

இந்த சட்டத் திருத்தங்கள் 1.12.2012 முதல் நடைமுறைக்கு வருகின்றது.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**